# சந்மார்க்க போதினி.

## (ஆறாம் பாகம்.)

ஹைஸ்கூல்

மூன்றாவது வகுப்புக்கு ஏற்றது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

வித்தியாநுபாலன அச்சகம்

சென்னை.

விலை அணா

371.32
CAN
PB

# சந்மார்க்க போதினி.

371.32
CAN
AF
P3

(ஆறும் பாகம்.)

ரகுநாதன் பதிப்பகம்
புத்தக வியாபாரம்
303, காலி வீதி,
கொழும்பு-8.
தொலைபேசி: 26946

ஹைஸ்கூல்

மூன்ருவது வகுப்புக்கு ஏற்றது.

நூலகம்
இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண

ARCHIVES

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1953.

விலை அணு 2.

# முன்னுரை.

அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
டாக்டர். அ. சிதம்பரநாதச்செட்டியார். எம்., ஏ.
எழுதியது.

"சன்மார்க்கபோதினி" என்ற தலைப்பில், திருவாளர். G. சுப்பிரமணியம் அவர்கள் தொகுத்து, அவரால் பாதுகாக்கப்பட்டு வரும் ஆறுமுகநாவலர் அச்சகத்தின் ஆதரவில் வெளியிட்டிருக்கும் புத்தகத்தைக் கண்டேன். அதனுள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நாலடியார், நீதிநெறிவிளக்கம், திரிகடுகம் முதலிய நீதிநூல்களிலிருந்து பல பகுதிகள் தொகுக்கப்பட்டுப் பொருளுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும் வேறு சில நீதிநூல்களின் கருத்துக்களும் திரட்டித் தரப்பட்டுள.

ஆறுமுகநாவலரவர்களுடைய பால பாடங்களின் காணப்பட்ட கருத்துக்கள் சிலவும் இத்தொகுதியின்கண் இடம் பெற்றுள.

மக்களை அறவழியிற் செல்லுமாறு அடிக்கடி பணித்து வருதல் தக்கது என நம் ஆன்றோர் கருதினர். அதனல், சிறு வயது முதலே அறம் இன்னதென்று கூறியும் அதன் வழி ஒழுகுக என வற்புறுத்தியும் வந்தனர்.

கல்வியினுல் ஆய பயன்களில் தலை சிறந்ததாக மதிக்கத் தக்கது பிறர்க்குத் தீமையின்றி நாம் எப்படி வாழலாம் எனக் கற்றுக்கொள்வது. சமுதாய நலத்தில் எவ்வாறு ஒவ்வொரு தனிப்பட்ட மகனும் மகளும் பங்கு பற்றவேண்டும் என்பதும், அந்நலத்திற்குக் கேடின்றித் தனது நலத்தை எங்ஙனம் அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதும் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம். இப் பாடத்தைக் கற்றுக் கொள்ளாமல் சில பாடல்களை மனப்பாடம் பண்ணிவிடுவதாலோ சில கணக்குக்களைப் போடுவதற்கு கற்றுக்கொண்டு

விடுவதாலோ பெரும்பயன் விளையாது. கல்வியினுடைய நோக்கமே மக்களை மாக்களாக இன்றி மக்களாக வாழும்படி தூண்டுதல் என்பது. மக்கட் பண்பு அமையாதவரைக் கற்றூர் எனச் சிறப்பித்துச் சொல்லுதல் பொருந்தாது. மக்கட்பண்பு அமையப் பெற்றவரே, நல்லொழுக்கம் கைவந்தவரே நன்கு கற்றூர் எனச் சொல்லத்தக்கவர்.

அதனால், பள்ளிக்கூடங்களில் அறவழிக் கல்வி இன்றியமையாதது என்பது புலனாகும்.

இக்கல்வி ஒரு சமயச் சார்பின்றிப் பொதுவாக, எல்லாச் சமயத்தார்க்கும் ஒத்ததாய் அளிக்கப்படவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். பல நாடுகளிலும் பல காலங்களிலும் வாழ்ந்து பெருமையடைந்த ஒழுக்கச் சீலர்களுடைய வரலாறுகளை இனிய முறையிலே, மாணவர் உள்ளத்தைக் கவரக்கூடிய வகையிலே, எடுத்து இயம்புதல் வழியாக மாணவரை நல்வழிப் படுத்துதல் இயலும். இதுவே இக்காலத்திற்கு ஏற்ற முறையென மதிக்கப்படுகிறது. என்றாலும், இவ்வாறு உள்ளத்தை உருக்க வல்ல வகையில் எடுத்து உரைக்கும் ஆற்றல் படைத்தவர் சிலரேயுண்டு. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒவ்வொரு வகுப்பிலும் அத்தகையார் உளரோ என்பது சிந்தித்தற்கு உரியது.

கதை வழியாகவும் வரலாறு வழியாகவும் அறவழி நிற்க என மாணவர்க்கு உணர்த்த முடியாது போயின், இது போன்ற புத்தகங்கள் நேரே அறவழியிற் செல்க எனப் பணிக்கின்ற வகையான் வற்புறுத்தும் ஆற்றல் உடையன எனக் காணலாம். பல நேரங்களில் வயது முதிர்ந்த நிலையிலும் ஒருவர் பிள்ளைப் பருவத்தே மனப்பாடம் பண்ணிய செய்யுட் கருத்துக்கள் நினைவிற்கு வந்து ஒருவரை நல்வழியில் நிறுத்துதல் உண்டு. அக்காரணத்தால், இது போன்ற புத்தகங்கள் மாணவ உலகிற்காக வரவேற்கத் தக்கன.

அண்ணாமலை நகர்
15-12-53.

அ. சிதம்பரநாதன்.

# முகவுரை.

கல்வியால் மனிதர் பூரண பலனை அடைவதானால் அக் கல்வி ஈசுர ஞானத்தையும் பத்தியையும் பிறப்பிக்கவும் வளர்க்கவும் தக்கதாக அமைக்கப்பட வேண்டுமென்பது உலகெங்கும் பெரும்பான்மை கற்றோருடைய அபிப்பிராயமாகத் திகழ்கின்றது. ஒரே சமய உணர்ச்சியுள்ள மாணவர் ஒருங்கு சேர்ந்து கற்கும் வித்தியாசாலைகளிலே சமயக் கல்வியை விரும்பியவண்ணம் அமைப்பது இலகு. ஆயினும் இந்நாட்டிலே பல்வேறு சமயத்தினராகிய மாணவர் கற்கும் வித்தியாசாலைகளிலே ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவருக்கேற்ற சமயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வது இலகுவன்று. ஆதலினால் சமயக் கல்வியை ஊட்ட இயலாத நிலையில், எல்லாச் சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடிய சந்மார்க்க போதனைக் கல்வியையாயினும் இவ்வித்தியாசாலைகளில் ஊட்டுதல் பொதுவாய், சமூகவாழ்க்கைக்கு ஓரளவிற்கு நற்பயனை அளிக்குமென்ற அபிப்பிராயத்தைப் பெரியோர் ஏற்றுக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தமிழிலே நீதிநூல்கள் மலிந்து பொலிந்திருந்தபோதிலும், தற்கால அரசினர் கல்வித்திட்ட முறைக்கேற்ப, மாணவருடைய வயதுக்கும் வகுப்புக்கும் அறிவுத்தகைமைக்கும் ஏற்றவாறு அவைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை ஆதலினால் நீதிநூல்திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, தருக்க சம்பந்தமான பாகங்களை விலக்கி வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தேர்ந்து வகுப்புமுறையில் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆராயப்பட்ட நூல்களாவன:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகமும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நாலடியார், நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான் மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திருக்குறள் முதலிய நூல் களில் சில பாகங்களுமாம். இவைகளைச் சேர்க்கவும் தொகுக்கவும் இவ்வித்தியாசாலையில் கடமையாற்றும் சில தமிழ்ப்பண்டிதர் செய்த உதவிக்கு நன்கு நன்றி பாராட்டு கின்றேன்.

இப்பிரசுரங்கள் ஒவ்வொரு வகுப்புக்குத் தேவையான அளவில் தனிப்பாகங்களாகவும் எல்லாப் பாகங்களுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரே புத்தகமாகவும் இவ்வித்தியா சாலையிலும், சென்னை தங்கசாலைவீதி 300-நெம்பர், புத்தக சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிப் பாகம் விலை அணா 2. முழுத்தொகுதி ரூபாய் ஒன்று.

சிதம்பரம்.
நாவலர் சைவப்பிரகாச
வித்தியாசாலை.
நந்தன வரு சித்திரை மீ.

G. சுப்பிரமணியம்.
தருமபரிபாலகர்.

# சந்மார்க்க போதினி.

## ஆரும்பாகம்.

சிறு பிராயத்திலே "சினிமா" படக்காட்சி யிலே காதல் கொள்ளாதே. தேசாந்தர அறிவை விருத்திபண்ணுவதுடன் யுக்தி புத்தியை வளர்க்கும் கல்வி ஊட்டலுக்கு விசேஷ உபகரணம் என்றும் சொல்லுவார்கள். அதை மறுக்கவில்லை. ஆனல் அது விளைக்குங் கெடுதியைச் சொல்லுவாரில்லை. ஏனென்றால் காட்சியைக் கண்ணுறும் வரையும் அத்துடன் சம்பந்தப்பட்டிருக்குஞ் சங்கீதச் சுவையை அநுபவிக்கும் வரையும் உதித்தெழுஞ் சிற்றின்ப மானது பின்னுக்குத் தொடர்ந்துவருந் தீமைகளை முகில்போல மறைத்துவிடுகின்றது. படக் காட்சியால் உண்டாகும் பலனில் நன்மை எவ்வளவு கூறு தீமை எவ்வளவு கூறு என்று பகுத்துத் தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் நமக்கு இல்லாது விட்டால் ஞானத்தாலும் அநுபவத் தாலும் முதிர்ந்த ஒரு மேதாவியார் ஆங்கிலத்

தில் எழுதியிருக்கிறதைக் கீழே சுருக்கி மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறதைப் படித்துப் பார்.

"பொதுவாய் இளமையிலே ஆண் பெண்ணுக்குள்ள பலவீனங்களை மட்டிட்டுச் சினிமா ஆக்கத்திலே ஈடுபடுபவர்கள் காதல் உணர்ச்சியை விளக்கும் படங்களையே கூடுதலாகக் காட்சிக்கு அமைக்கிறார்கள். இளைஞர்கள் அல்லும் பகலும் இக்காட்சிகளைத் தரிசிக்கும்போது புலன்களுக்கு அகால முதிர்ச்சி விளைகின்றது. இதன் பலனாகப் பொறிகளுக்கு அநாவசியமான கிளர்ச்சி ஏற்படுகின்றது. பொறிகள் அக்கிளர்ச்சிக்கேற்ற பயிர்ச்சியை அதாவது இன்ப நுகர்ச்சியை நாடுகின்றன. இதுவே துன்மார்க்கத்திற்கு வித்தாகின்றது."

"இதைவிட விசாரணைக்கு, ஆராய்ச்சிக்குப் பரிசீலனைக்கு அகப்படாத முறையில் திருட்டு, கொலை முதலிய பாரிய குற்றங்கள் செய்து பிடிபடாமல் தப்பித்துக்கொள்ள நவீன சூழ்ச்சி முறைகளைக் கற்பிக்கச் சினிமாக் காட்சிகள் வெகுவாய் உதவி புரிகின்றன."

இன்னும் ஸ்ரீ G. D. நாயுடு என்றொரு தொழில் விற்பன்னர் ஒருமாசத்திற்குமுன் மதுரைக் கல்லூரியில் கணித சாஸ்திர சமாஜத்திற்கு முன்பாக செய்த ஒரு உபந்நியாசத்

தில், சினிமாப்படக் காட்சியால் தேகத்துக்கு உண்டாகும் வீரியக் கெடுதியைக் கணித சாஸ்திர முறையாக மிகத் தெளிவாக ருசுப்படுத்தியிருக்கிறார். விசேஷமாய் 15 வயசுக்கும் 30 வயசுக்கு மிடையிலுள்ள ஆண் பெண் மக்களுடைய வீரியத்திற்கு சினிமாப்படக்காட்சி எவ்வளவு இடையூற்றை விளைவிக்கிறதென்று திருத்தமாயும் அழுத்தமாயும் எடுத்து வற்புறுத்தியிருக்கிறார். நம்முடைய தேகத்திற்கு வீரியம் ஒரு இன்றியமையாத அம்சமாகிறது. வீரியங்குன்ற நாம் இங்கு வந்திருக்கும் நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் நோய்வாய்ப்பட்டுக் கேவலஸ்திதியை அடைந்து இம்சைப்படுங்காலம் தேசாந்தரக் கல்வியாவது யுக்தி புக்தி கூர்மையாவது கைகொடுக்க மாட்டாது.

ஆனதால் சினிமாப் பார்க்க விரும்பினால் தேக ஆரோக்கியத்திற்கும் வீரியத்திற்கும் இடையூறு விளைக்காமல் சந்மார்க்க முறையையும், சத்தியத்தையும், அன்பையும், ஈசுர பக்தியையும் ஊட்டத்தகுந்த படங்களைத் தேடிச் சான்றோரிடம் விசாரித்து அவர்களுடைய சம்மதத்துடன் பார்.

மூடரோடு சேர்ந்திருப்பதும், கற்புடை மனைவியை அடித்தலும், துன்மார்க்க நடை

யுள்ளவரை வீட்டுக்குள் அழைத்துச் செல்லுத லும் கேட்டைத்தருவன.

நன்றிமறந்த நாணிலியும், மன்றிற் பொய்ச் சான்று புகன்றவரும், அடைக்கலப்பொருளை வெளவியவரும் மக்கட்பேறின்றி வருந்துவர்.

தோப்பும் குளமும் அமைத்தவரும், மறை நூல் ஓதியுணர்ந்தவரும், பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துண்ணும் இல்வாழ்வானும் உண்மைச் செல்வராவர்.

எவரையும் எளியரென்று இகழாதே.

சிறந்தபொருளாயினும் தகாதவர் கொடுக்க வாங்காதே.

தகாதன செய்தாலும் ஏழை மக்களைச் சீறுதே.

தகாத சொற்களைப் பதைத்துச் சொல்லி விடாதே.

சான்ரேர்கள் தமக்கு மானக்கேடு உண்டா கும்படி உயிர் வாழமாட்டார்.

மக்கள் செல்வங் கெட்டு வறுமையுறும் போதுதான், அவர் உறவினரால் அவர்க்கு உண்டாகும் பயன் நன்கறியப்படும்.

எக்குடியினும் நன்மக்கள் தோன்றுவர்.

நல்லொழுக்கம் செல்வம் போன்றது.

முறையான இல்லறவொழுக்கம் துறவறத்தைப் போன்றது.

பிறரைப் புறங்கூறல் அவரைக் கொலை செய்தல் போல்வதாம்.

தம்மை மதியாரைத் தாம் மதித்தல் இழிதகமையாகும்.

திருடர்க்கும், பொருள் தேடுவோர்க்கும், அப்பொருளைப் பாதுகாப்பார்க்கும் தூக்கம் இராது.

பிறர் செய்த தீமைகட்காக அவரைக் கறுவாமை வேண்டும்; ஆனால் அவர் செய்த நன்மைகளை மறவாமை வேண்டும்; சினத்தை விடல் வேண்டும்; முற்போக்கைத் தடுக்குந் தவறான செயல்களைக் கெடுத்தல் வேண்டும்.

உறவினரை ஒதுக்குதல் கேட்டினைப் பெருக்கும்.

ஈகை செல்வத்தா லுண்டாகும்.

உறவினர்க்கு மகிழ்ச்சி இன்சொல்லால் உண்டாகும்.

வன்சொல்லும் வஞ்சனையும் கண்ணோடாமையால் உண்டாகும்.

இரத்தல் வறுமையால் உண்டாகும்.

இழிவை விரும்பினுல் இரக்க.

அழியாமை வேண்டினுல் புகழ் புரிக.

உறுதுணையை வேண்டினுல அறஞ்செய்க.

வெல்லல் விரும்பினுல் வெகுளியை விடுக.

மனைவி இல்லா மனை பாழ்.

நண்பர் இல்லாப் பக்கம் பாழ்.

ஆன்ருேர் இல்லா அவை பாழ்.

கற்றறிவு இல்லா உடம்பு பாழ்.

திரியில் எரியுஞ் சுடரைக் கண்டால் அது சிறிதாயிருப்பினும் உலகத்தார் தொழுவர்; விறகில் எரியுஞ் சுடரை அது பெரிதாயிருப்பினும் தொழார்.

ஒரு குடும்பத்திலேயே படியாதவன் மூத்தவனுயினும் மதியார்; படித்தவன் இளையவனுயினும் மதித்துப் பாராட்டுவார்.

பலரும் நிறைந்து ஒத்து உறைவராஞல் ஊர் நன்ருகும்; ஒருவன் ஐயந் திரிபறக் கற்பாஞனல் அவன் மதி நன்ருகும்; ஆனிரைகள் ஏறுகள் உடனிருத்தலால் சிறப்படையும்; ஏழைகட்கு உணவளிப்பதனுல் ஒருவனது குடி மேலோங்கும்.

கொடுப்பதானுல் ஏழைகட்கு உணவு கொடுக்க;

விடுப்பதானுல் பற்றை விடுக்க;

எடுப்பதானுல் சுற்றத்தாருள் ஏழைகளை எடுக்க;

கெடுப்பதானுல் வெகுளியைக் கெடுக்க.

அழகும் இளமையும் வறுமையிற் கெடும்;

குலத்துயர்வும் குலத்தொழுக்கமும் கல்லாமையிற் கெடும்.

கணவரோடு ஒருமைப்பட்டு நிற்க முயலுதலே பெண்டிர்க்கு நற்செய்கையாகும்;

அற நினைவுகளை எழுப்பிக்கொண்டிருக்க முயலுதலே அந்தணருள்ளத்துக்குச் சிறப்பு; சுற்றத்தாரை நீக்கி வாழ்தல் கேட்டுக்கு முயலுதலே யாகும்.

அஞ்சாமை மிகுந்தால் வலிமை மிகும்;

மனையாள்மாட்டுக் கண்ணேட்டம் இருந்தால் இனம் பெருகும்; அருள் இரக்கம் இருந்தால் அறம் மிகும்; கீழ்மைக் குணம் இருந்தால் தீவினை மிகும்.

இளம் பருவத்தில் கல்லாமை குற்றம்;

பொருள் இல்லாத காலத்தில் ஈதல் குற்றம்; உறவினர் துணை இல்லாத காலத்தில் பிறரைச் சினத்தல் குற்றம்; உள்ளன்பிலார் மாட்டு உண்ணுதல் குற்றம்.

ஏரி சிறிதானால் நீர் வழிந்து போய்விடும்; வீட்டில் வருவாய் குறைவானால் மனையாள் வரம்பு கடந்து பேசுவள்; முன்னைத் தவம் சிறிதானால் தீவினை மிகுந்து வருத்தும்; வலிமை சிறிதானால் பகைவர் மேற்போந்து வென்றிடுவர்.

மனைக்கு விளக்கம் நன்மனைவி; நன்மனைவிக்கு விளக்கம் அறிவறிந்த மக்கள்; அம்மக்கட்கு விளக்கம் கல்வி; கல்விக்கு விளக்கம் மெய்யுணர்வு.

இன்சொல்லால் நட்புரிமை உண்டாகும்; வன்சொல்லால் கெடு நினைவு உண்டாகும்; நயமான சொற்களால் அருள் நெஞ்சமுண்டாகும்; அவ்வருள் நெஞ்சத்தால் அழிவில்லாத வீடு பேறுண்டாகும்.

எளிய வாழ்வு, உயர்ந்த நோக்கு, பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு இந்நான்குமே ஒருவனுக்கு மண்ணுலகத்திலே விண்ணுலக வாழ்வை யளிக்கவல்லன.

உனதின்பம் பிறரைத் துன்புறுத்தாம லிருப்பதே.

எவன் தனக்குச் சம்பந்தமற்றதாயும் உனக்கு அந்தரங்கமாயுமுள்ள விஷயத்தை கூர்மையாய் விசாரிக்கின்றானோ அவனுடைய உறவில் மிகவும் எச்சரிக்கையாயிரு.

கடவுளை வணங்கு, கருணையைப் பெறுவாய்.

உண்மையைப் பேசு நன்மையைப் பெறு வாய்.

பொறுமையுந் தூய்மையும் வெற்றி தரும்.

அவசர புத்தியும் அடக்கா முன்கோபமும் தீமையை விளைவிக்கும்.

ஒவ்வொரு மாணவனுஞ் சிறந்த உத்தம மான மனோலக்ஷியங்களை அநுசரித்து வாழ்க் கையிலே அவைகளைச் சாதனை செய்யவேண்டும் அன்பு வழியிலும் சத்திய மார்க்கத்திலும் தர்ம நெறியிலும் சார்ந்தவைகளே உத்தமமான லக்ஷியங்களாகும். நம்பிக்கை, தயாளகுணம், சுயநலமற்ற பரநலச் செய்கைகளுக்குரிய காலம் இளமையே.

யாத்திரிகர் துறவிகள் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட அறச்செயல்களையும் ஏழைகள் உணவுக்காகவும் கல்விக்காகவும் ஏற்படுத்தப்பட்ட தருமங்களையும் அழித்தவரும், அழிப்பதற்குக் காரணராயும் உதவியாயும் இருந்தவரும் தனக்கும் தன் சந்ததிக்கும் நாசத்தையே தேடிவிடுவர்.

ARCHIVES

# பிரகடன பத்திரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| முதற்பாலபாடம் | 0 | 3 | 0 |
| இரண்டாம்பாலபாடம் | 0 | 5 | 0 |
| மூன்றாம்பாலபாடம் | 0 | 10 | 0 |
| நான்காம்பாலபாடம் | 1 | 4 | 0 |
| நான்காம்பாலபாடம் குறிப்புரையும் அப்பியாச வினாக்களும் | 1 | 12 | 0 |
| சூடாமணி நிகண்டு 12-தொகுதியும் உரையுடன் (முதலிரண்டு தொகுதிகள் சொற்பொருளுடன்) | 2 | 0 | 0 |
| ஷை 10-தொகுதியுரை | 1 | 4 | 0 |
| ஷை 11, 12 தொகுதியுரை | 0 | 12 | 0 |
| முதற்சைவவினாவிடை | 0 | 3 | 0 |
| இரண்டாஞ்சைவவினாவிடை | 0 | 10 | 0 |
| பெரியபுராண வசனம் | 2 | 8 | 0 |
| சிதம்பரமான்மியம் | 0 | 3 | 0 |
| அபிராமியந்தாதி உரை | 0 | 4 | 0 |
| திரிகடுகவுரை | 0 | 4 | 0 |
| நீதிவெண்பாவுரை | 0 | 4 | 0 |
| நீதிநெறிவிளக்கம் மூலம் | 0 | 2 | 0 |
| ஆத்திசூடி கொன்றைவேந்தனுரை | 0 | 2 | 0 |
| நல்வழியுரை | 0 | 2 | 0 |
| நன்னெறியுரை | 0 | 2 | 0 |
| வாக்குண்டாமுரை | 0 | 2 | 0 |

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,

வித்தியாநுபாலனயந்திரசாலை,

நெ. 300, தங்கசாலை வீதி, சென்னை.